ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| **வெளியிடுபவர்** | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| **திகதி** | 29.06.2015 |

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 யூன்

இலங்கைப் பொருளாதாரமானது 2015இன் முதல் காலாண்டில் பொருளாதாரத்தின் மூன்று முக்கிய துறைகளிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களுடன் சேர்ந்து 6.4 சதவீதத்தினால் விரிவடைந்தது. பணிகள் துறை மற்றும் கைத்தொழில் துறையானது முறையே 7.5 சதவீதம் மற்றும் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், வேளாண்மைத் துறை மீட்சியின் வலுவான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. முன்னோக்கிச் செல்கையில், குறைந்த பணவீக்கம் மற்றும் குறைந்த சந்தை வட்டி வீதங்களுடன் உயர்தர பொருளாதாரங்களின் மேம்பாடடைந்த செயலாற்றத்தின் எதிர்கால நோக்குகள் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளிற்கு நன்மையளித்தன.

வெளிநாட்டுத் துறையில், நாட்டிற்கான பன்னாட்டு முறி, இலங்கை அபிவிருத்தி முறிகள், இந்திய றிசேர்வ் வங்கியுடனான வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் மற்றும் சுற்றுலாத் துறை அத்துடன் தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்ளடங்கலான பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் வடிவிலான கிரமமான உட்பாய்ச்சல்கள் என்பன நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளினை மேம்படுத்தியது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகள், வரித் திருத்தங்கள் குறைந்த இயந்திர இயலளவுடைய மோட்டார் வாகனங்களின் இறக்குமதியினை சாதகமாக்கியமை மற்றும் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் என்பவற்றின் காரணமாக 2015 ஏப்பிறலில் இறக்குமதிகள் அதிகரித்தன. எனினும், உலக எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சி எண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமானளவில் வீழ்ச்சியடைய காரணமாகியது.

2015 ஏப்பிறலில் விரிந்த பணநிரம்பல் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 13.9 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. தனியார் துறைக்கான கொடுகடன் 2015 ஏப்பிறல் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.2 சதவீதமாகக் காணப்பட்டது. உண்மை நியதிகளில், தனியார் துறைக்கான கொடுகடன் 2015 ஏப்பிறல் மாதம் வரை சராசரியாக ஏறத்தாழ ரூ.25 பில்லியனினால் அதிகரித்து பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு தொடர்ச்சியாக உதவின. அதேவேளை, வங்கித்தொழில் துறையினரால் அரசாங்கம் மற்றும்

அரசிற்கு சொந்தமான நிறுவனங்களிற்கான தேறிய கொடுகடன் அதிகரித்தமையும் நாணய விரிவாக்கத்திற்குப் பங்களித்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு, பணவீக்கம் 2015 மேயில் 0.2 சதவீதமாக காணப்பட்டதுடன் தொடர்ச்சியாக நான்கு மாதங்களாக 1.0 சதவீதத்திற்கும் குறைவாக மாற்றமின்றிக் காணப்பபட்டது. 2015 மேயில் ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் முன்னைய மாதத்தின் 2.1 சதவீதத்திலிருந்து 1.9 சதவீதத்திற்கு மேலும் குறைவடைந்தது. அதேவேளை மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 மேயில் 2.6 குறைந்ததொரு சதவீதத்தில் மாறாது காணப்பட்டது. பணவீக்கமானது ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் 4.0 சதவீதத்திற்கும் குறைவான சாதகமான வீதத்தில் மாறாது பேணுவதற்கு எறிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பின்னணியில் நாணயச் சபை தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. இதற்கமைய, 2015 யூன் 26ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் பேணுவதெனத் தீர்மானித்தது.

| நாணயக் கொள்கைத் தீர்மானம் | கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |